1969 ஆகஸ்ட் 19]

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை யிலிருக்கும் அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம்., பி.எஸ்ஸி., வகுப்புக்கு திருப்பூர், திருப்பூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து செல்லும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவது கிடையாது. திருப்பூர் பகுதியில் பி.காம்., பி.எஸ்ஸி. படிப்பதற்குக் கல்லூரி கிடையாது. இதைக் குறித்து, கோவை அரசினர் கலைக் கல்லூரி முதல்வரைச் சந்தித்து விசாரித்ததில், கோவையிலும், கோவையைச் சுற்றியிருக்கும் பகுதிகளிலும் உள்ளவர்களுக்கு பத்து மார்க் சேர்த்துக் கொள்ளுகிறார்களே தவிர, மற்ற இடங்களில் உள்ளவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியாமற் போகிறது. இதனால், திருப்பூர், திருப்பூரைச் சுற்றியுள்ள பகுதியில் இருக்கிறவர்கள் பட்டப் படிப்புக்கு கோவை செல்லக்கூடிய நேரத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. அடுத்த கல்வி ஆண்டிலாவது அப்படிப்பட்ட பாதிப்பு வராமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறியது கவனத்தில் கொள்ளப்பட்டு, அதற்கு என்ன வழிவகை செய்யலாம் என்பது முறைப்படி ஆராயப் படும்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய அடிப்படையில் திறமையாக இருக்கின்ற மாணவர்களுக்கும் கூட கோவையில் இருக்கும் கலைக் கல்லூரியில் இடம் கிடைப்ப தில்லை. இந்த நிலையைப் போக்க உடனடியாக ஏதாவது நட வடிக்கை எடுத்தால், தற்சமயம் இடம் கிடைக்காமல் இருக்கும் மாணவர்களுக்கு இடம் கிடைக்க உதவியாக இருக்கும். ஆகவே, அதற்கான நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார் களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோவையில் அரசினர் கல்லூரி இருக்கிறது. திருப்பூரில் அரசினர் கல்லூரி இருக்கிறது. மற்ற இடங்களில் தனியார் கல்லூரிகள் தான் இருக்கின்றன. தனியார் கல்லூரியில் சேர்த்துக்கொள் வது அவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. கட்டுதிட்டங் களை அவரவர்கள் வகுத்துக்கொண்டு அதன்படி சேர்த்துக் கொள்ளுகிறார்கள். கோவை, சேலம் போன்ற இடங்களில் ஒரே அரசாங்கக் கல்லூரி இருப்பதால் நெருக்கடி இருக்கிறது. இந்தக் கணக்கு கலைக் கல்லூரியோடு நின்றுவிடுகிறது. தனியார்க் கல்லூரியில் சேர்க்கப்படும் கணக்கு இதில் வரவில்லை. நெருக் கடியைத் தவிர்க்க என்ன செய்யலாம் என்பதை முறைப்படி ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

Drinking water supply to Sriperumbudur Panchayat.

*23 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there is any proposal with the Government to provide protected drinking water supply to Sriperumbudur Panchayat in Chingleput district?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. விநாயகம் : ஸ்ரீபெரும்புதூர் பஞ்சாயத்து போர்டு அங்கே இருக்கிற பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வேண்டும் என்று பல ஆண்டுகளாக முயற்சித்தும், இன்னும் அதற்கு வேண்டிய துறையிலே எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதை அரசாங்கம் அறியுமா? அங்கிருந்து வேண்டுகோள் வந்திருந்தும் கூட, அதற்குப் போதிய அளவுக்கு பணத்தை ஒதுக்கிவைத்து, அதை நிறைவேற்றவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருந்தால் எப்பொழுது அதைப் பற்றி பரிசீலிப்பார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நகரக் குடிநீர் வழங்கும், கழிவு நீர் அகற்றும் திட்டம் என்பதன் கீழ், அதாவது அர்பன் வாட்டர் சப்ளை அண்டு டிரைனேஜ் ஸ்கீம் என்பதன் கீழ் ஸ்ரீபெரும்புதூர் அடங்காது. ஏனென்றால் 10,000 மக்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டிருக்கிற பேரூராட்சி மன்றங்கள்தான் இதில் அடங்கும். ஸ்ரீபெரும்புத்தூரில் மக்களின் எண்ணிக்கை 7,085 ஆக இருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட ரூ. 12½ கோடி தான் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படக் கூடும். அதில் பெரிய திட்டங்கள் 31 திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன. அதற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அதற்கு மேல் பணம் கிடைக்கிற வாய்ப்பைப் பொறுத்துத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஸ்ரீபெரும்புதூர் அந்த 31 திட்டங்களுக்குள் அடங்காது. ஸ்ரீபெரும்புதூர் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு இப்பொழுது நான்கு மேல்நிலை தொட்டிகள் இருக்கின்றன. அங்கே மற்றொரு மேல்நிலைத் தொட்டி வேண்டும் என்று ஒரு தீர்மானம் போட்டு 1966-ம் ஆண்டில் ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி மன்றம் அனுப்பிவைத்திருக்கிறார்கள். அதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்பதைப் பற்றி அவர்கள் குறிப்பு ஒன்றும் அனுப்பவில்லை. அதை மீண்டும் அனுப்பிவைத்தால் ஐந்தாவது தொட்டி அமைப்பதற்கு என்ன வழி செய்யலாம் என்பது பற்றி ஆராயலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி மன்றத்தைப் பற்றிய கேள்வி. திரு. முனு ஆதி அவர்கள்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி மன்றம் முதல்தர ஊராட்சி மன்றம் என்ற அடிப்படையில் இருக்கிறபொழுது, செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனையோ ஊராட்சி மன்றங்களுக்கு இப்படிப்பட்ட திட்டங்கள் போட்டு அரசாங்கத்தில் தயாராக இருக்கின்றனவா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும்.

1969 ஆகஸ்ட் 19]

திரு. கே. விநாயகம் : ஸ்ரீபெரும்புதூர் நகரத்தில் போதிய அளவுக்கு மக்கள் தொகை இல்லை. அதற்காக நாங்கள் அந்த ஊருக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் கொடுக்கமாட்டோம்' என்ற ஒரு கொள்கை வைத்திருந்தால், அங்கு பொது மக்களுக்கு எப்படித்தான் நல்ல தண்ணீர் கிடைக்கும்? அது ஒரு யாத்திரிக ஸ்தலமாக இருப்பதால் அதைவிட அதிகமாக பொதுமக்கள் ஆண்டு தோறும் அங்கே வந்து போகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? மேல் நிலைத் தொட்டி, அதாவது ஓவர் ஹெட் டாங்கு இருக்கிறது என்று சொன்னால், அந்த இடத்திலே இருக்கும் ஏரியிலிருந்து பாதுகாக்கப்படாத தண்ணீரை அங்கே கொண்டு வந்து கொட்டி, மக்களுக்கு தண்ணீர் தருகிறார்கள். அதுவும் இப்பொழுது அந்த ஏரி வற்றிப்போய்விட்ட காரணத்தினால் தண்ணீர் இல்லை. மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் அவதிப்பட்டு, இந்த அரசாங்கத்தின் மீது பழி போடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அர்பன் வாட்டர் சப்ளை அண்டு டிரைனேஜ் ஸ்கீம் என்பதன் கீழ் ஸ்ரீபெரும்புதூர் பொருந்தி வராது என்றுதான் கூறினேன். ஆனால், இந்தத் திட்டம் பொருந்தி வருகிற இடங்களில் மட்டும் தான் குடிநீர் வழங்கப்படும், வேறு இடங்களில் குடிநீர் வழங்கப்பட மாட்டாது என்பது கொள்கை அல்ல. சிற்றூர்களிலும், சேரிகளிலும் குடிநீர் வழங்குவதற்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. ஸ்ரீபெரும்புதூர் குடிநீர் வழங்குவதற்கு நான்கு மேல் நிலை தொட்டிகள் ஏற்கனவே நான்கு பகுதிகளில் இருக்கின்றன. ஐந்தாவது மேல்நிலைத் தொட்டி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள், அதற்கு எவ்வளவு வேண்டும் என்று கேட்கவில்லை, அதற்கு பிரபோஸல்ஸ் அனுப்பவில்லை. அது முறைப்படி வருமானால் கவனிக்கப்படும் என்று சொன்னேன். ஆகவே, இந்த அரசாங்கத்தின் மீது எந்தப் பழியும் இல்லை. இது தொடர்ந்து இருந்து வருகிற பழியே தவிர, புதிய பழி இல்லை.

வீட்டுமனைகள் ஒப்படை

* 32 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பி.என். பட்டி பஞ்சாயத்து, வீரக்கல் புதூர் பஞ்சாயத்துக்களுக்குட்பட்ட கவிபுரம், தேசாய் நகர், ராமமூர்த்தி நகர், கருமலைக்கூடல், சாம்பள்ளி போன்ற ஊர்களில் இருக்கும் வீட்டு மனைகளை அவைகளில் வீடு கட்டிக் குடியிருக்கும் வீட்டில் உரிமையாளர்களுக்கு பட்டா செய்து கொடுப்பது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கருமலைக்கூடல், தெங்கல்வாரை கிராமங்களில் நிலம் வெளவியவர்களின் அனுபோகத்தில் உள்ள நிலங்கள், ரயிலடியிலிருந்து ½ மைலுக்குள் அமைந்தி